The Hindu (English)
Dated: 30.04.2025

FIFTY YEARS AGO APRIL 30, 1975

# No signatures on ballot papers: plea conceded

New Delhi, April 29: The system of obtaining the signatures of voters or their thumb impressions on the counterfoils of the ballot papers will be done away with. This decision was announced by Mr. H.R. Gokhale, Union Minister for Justice, at the conclusion of his second round of discussions with the Opposition leaders on electoral reforms to-day.

The meeting was attended by representatives of the Congress, Congress-O, DMK, ADMK, CPI, CPM, Socialist Party, Jan Sangh, BLD, Muslim League and the Republican Party. Mr. P.G. Mavlankar represented the independents.

The Cabinet Ministers who were present during the talks were Messrs. Jagjivan Ram, Swaran Singh, Uma Shankar Dikshit, K. Raghuramiah and H.R. Gokhale, who led the discussions. Mr. Om Mehta, Minister of State for Parliamentary Affairs, and Mrs. A. Sarojini Mahishi, Minister of State in the Ministry of Justice, were present.

Mr. Gokhale readily conceded the demand that obtaining of signatures or thumb impressions had a tendency to violate secrecy of the ballot. The Government, he said, was not prepared to accept this complaint but if they had any such apprehension, it had no objection to give up this process. This system was introduced only in 1973. The Opposition leaders very happy that the Government had conceded their demand.

The Opposition parties made it clear that they were not prepared to discuss in isolation the more vital question relating to increase in the ceiling fixed on election expenses. They did not want that the law should be changed just now to be made applicable to the Gujarat elections. They maintained that election expenses by political parties and candidates should be gone into thoroughly. Even though Mr. Gokhale was willing to discuss the issue to-day, the Opposition leaders wanted him to defer it to a later date.

D.T.Next

Dated: 30.04.2025

# Aadhaar sharing by voters voluntary: EC

NEW DELHI: As the Election Commission works to purify electoral rolls of duplicate entries, sources in the government asserted on Tuesday that Aadhaar sharing by voters on a voluntary basis as prescribed in the law will remain unaltered.

They underlined that sharing Aadhaar details with poll authorities is voluntary under the Election Laws (Amendment) Act, 2021 and it will continue to remain so.

The sources also noted that there is no plan to tweak the law or related rules in this regard.

They were responding to questions on whether there was a proposal to make Aadhaar sharing compulsory as also whether voters who don't share details will have to explain before poll authorities the reasons for not giving out details.

They said the ground rules will remain unaltered and no provision is proposed to be added as of now.

Amid a debate on the purity of electoral rolls, the Election Commission of India had said last month that the regular updating process of the voter list will be strengthened in close coordination with the birth and death registration authorities.

D.T-Next

Dated: 30.04.2025

# SC defers plea to stop convicts from forming parties, holding posts

**NEW DELHI: The Supreme Court on Tuesday deferred to August 11 a plea to restrain convicted persons from forming political parties and holding posts in them.**

A bench comprising Chief Justice Sanjiv Khanna and Justice Sanjay Kumar refused the final hearing on the PIL filed by lawyer Ashwini Updhyay.

"I do not want to reserve any more judgement," the CJI, who demits office May 13, said.

The bench then posted the case's final hearing on August 11 and allowed the parties to file written submissions.

The PIL, filed in 2017, sought barring convicts from forming political parties and becoming office-bearers during the period they were disqualified.

The bench previously wondered how convicted persons, who are barred from electoral politics, could decide candidates in polls and ensure maintenance of probity in public life. "Here is a person who is convicted and disqualified from contesting an election. How can he decide the candidates for election? How can the purity of democracy be maintained?" the bench asked.



The plea claimed 40 per cent of the legislators were either convicted or faced trial. "That is why there is resistance. They do not want probity," it added.

The top court on December 1, 2017 sought the response of the Centre and the Election Commission on the PIL and agreed to examine the constitutional validity of section 29A of the Representation of the People Act (RPA), 1951 (RPA), which deals with the power of the poll panel to register a political party.

The plea, as a result, sought a direction to declare Section 29A of the RPA as "arbitrary, irrational and ultra-vires" to the Constitution and to authorise the poll panel to register and unregister political parties.

The petitioner also sought a direction to the Election Commission to frame guidelines to decriminalise the electoral system and ensure inner party democracy, as proposed by the National Commission to Review the Working of the Constitution.

Even a person who has been convicted of heinous crimes like murder, rape, smuggling, money laundering, loot, sedition, or dacoity, can form a political party and become its president or office bearer, it added.

The Hindu ([illegible])

Dated: 30.04.2025

### இரட்டை இலை சின்னம் விவகாரத்தில்

# அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டவர்களின் மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும்

## தேர்தல் ஆணையத்தில் சி.வி.சண்முகம் வலியுறுத்தல்

**சென்னை**

இரட்டை இலை சின்னம் விவகாரத்தில் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டவர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தில் அதிமுக எம்.பி. சி.வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இரட்டை இலை சின்னத்தை பழனிசாமிக்கு ஒதுக்கியதை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம், ஓ.பி. ரவீந்திரநாத், ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்த புகழேந்தி, கே.சி.பழனிச்சாமி, ராம் குமார் ஆதித்தன், சூரியமூர்த்தி, காந்தி உள்ளிட்டோர் தேர்தல் ஆணையத்தில் மனு அளித்தனர். தேர்தல் ஆணையம் அந்த மனுக்கள் மீது விசாரணை நடத்த சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்திருந்தது. அந்த தடையை சென்னை உயர்நீதிமன்றம் நீக்கியதை தொடர்ந்து, அனைத்து தரப்பினரும் ஆஜராகுமாறு தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்தது.

அதன்படி, இரட்டை இலை சின்னம் தொடர்பாக இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தில் விசாரணை நடைபெற்றது. பழனிசாமி சார்பில் முன்னாள் அமைச்சரும் அதிமுக எம்பி.யுமான சி.வி.சண்முகம், ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் ஓ.பி.ரவீந்திரநாத், வழக்கறிஞர் ராஜலட்சுமி மற்றும் புகழேந்தி, கே.சி.பழனிச்சாமி, சூரியமூர்த்தி, ராம் குமார் ஆதித்தன் உள்ளிட்டோரிடம் விசாரணை நடந்தது.

விசாரணைக்குப் பின்னர், சி.வி. சண்முகம் கூறும்போது, "அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாக கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள், கட்சிக்கு தொடர்பே இல்லாதவர்கள் தேர்தல் ஆணையத்தில் மனுதாக்கல் செய்துள்ளனர். அதுதொடர்பாக விசாரணை நடைபெற்றது. பழனிசாமி சார்பில் அதிமுகவின் கருத்துகளை வழக்கறிஞர்கள் மூலம் தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்துள்ளோம். அதிமுகவுக்கு தொடர்பு இல்லாதவர்கள் அளித்துள்ள இந்த மனுக்கள் விசாரணைக்கு உகந்தது அல்ல. தொடக்க நிலையிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளோம். கட்சியின் உள் விவகாரங்கள், கட்சியின் பிரச்சினைகளில் தலையிடவும் கட்சி விதிகளில் செய்யப்படும் திருத்தங்களை விசாரிக்கவும் தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை" என்றார்.

ஓ.பி.ரவீந்திரநாத் கூறும்போது, "அதிமுக, இரட்டை இலை விவகாரத்தில் பழனிசாமிக்கு எந்த அதிகாரமும் இல்லை. அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம்தான் உண்மையான அதிமுக ஆவார். அவருக்குதான் இரட்டை இலை சின்னம் ஒதுக்க வேண்டும்" என்றார்.

ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்த புகழேந்தி கூறும்போது, "தேர்தல் ஆணைய ஆவணத்தில் தற்போது வரை அதிமுகவுக்கு ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என உள்ளது. அதிமுகவுக்கு நிரந்தர பொதுச்செயலாளர் ஜெயலலிதாதான்" என்றார். மேலும், புகழேந்தி ஏற்கெனவே கொடுத்த மனுக்களின் நகல்களை இணைத்து புதிய மனு ஒன்றை தேர்தல் ஆணையத்துக்கு சமர்ப்பித்தார்.

The Hindu (Tamil)
Date: 30.04.2025

# தவெக கொடியை எதிர்த்த வழக்கில் விசாரணை தள்ளிவைப்பு

**சென்னை**

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழக கொடியில் யானை சின்னம் இடம்பெற்றுள்ளது. இதை எதிர்த்து பகுஜன் சமாஜ் கட்சியின்மாநில பொதுச் செயலாளரான பெரியார் அன்பன் என்ற இளங்கோவன் சென்னை பெருநகர முதலாவது உதவி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அதில் 'எங்கள் கட்சிக்கான யானை சின்னத்தை தவெக கொடியில் பயன்படுத்த தடை விதிக்க வேண்டும்' என்று கோரியிருந்தார். இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த நீதிமன்றம், இது தொடர்பாக தவெக தலைவர் விஜய் மற்றும் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் இந்த வழக்கு விசாரணையை ஜூன் 4-ம் தேதிக்கு நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.

Dinamalar

Dated: 30.04.2025

# இரட்டை இலை சின்னம் விவகாரம் தேர்தல் ஆணையத்தில் புதிய மனு

**– நமது டில்லி நிருபர் –**

'இரட்டை இலை சின்னத்தை பழனிசாமிக்கு ஒதுக்கியது, உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது. அவ்வாறு சின்னத்தை ஒதுக்கியதன் வாயிலாக, மிகப்பெரிய சட்டச் சிக்கல் எதிர்காலத்தில் ஏற்படலாம்' என, தேர்தல் ஆணையத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க., முன்னாள் நிர்வாகி புகழேந்தி, டில்லி தலைமை தேர்தல் ஆணையத்துக்கு நேற்று வந்து, ஒரு மனு அளித்தார்.

## சேதாரம்

மனு குறித்து அவர் அளித்த பேட்டி:

அ.தி.மு.க., கட்சி மற்றும் சின்னம் குறித்த விவகாரத்தில் சிவில் கோர்ட் எடுக்கும் முடிவுதான் இறுதியானது என உச்ச நீதிமன்றம், இரட்டை இலை தொடர்பான வழக்கில் தெரிவித்துள்ளது.

தெரிந்தோ தெரியாமலோ, தேர்தலில் பழனிசாமிக்கு இரட்டை இலை சின்னத்தை தேர்தல் ஆணையம் கொடுத்து விட்டது.

ஒருவேளை எதிர்காலத்தில் சிவில் கோர்ட்டின் தீர்ப்பு, பழனிசாமி தரப்புக்கு எதிராக அமைந்துவிட்டால், இப்போது சின்னத்தை தந்ததன் வாயிலாக, மற்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதாரத்தை எதைக் கொண்டும் சரி செய்ய முடியாது.



புகழேந்தி

எனவே, இரட்டை இலையை பழனிசாமி தரப்புக்கு கொடுத்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் மிகப்பெரிய தவறு செய்து விட்டது.

இருந்தபோதும், கடந்த 2024ல் நடந்த லோக்சபா தேர்தலில் அ.தி.மு.க., அனைத்து தொகுதிகளிலும் தோற்று விட்டது. இதற்கு, தேர்தல் ஆணையத்தின் தவறான முடிவும் ஒரு காரணம்.

இதைத்தான், தேர்தல் ஆணையத்துக்கு கொடுத்திருக்கும் மனுவில் தெரிவித்துள்ளோம்.

அ.தி.மு.க.,வில் ஒருங்கிணைப்பாளரும், இணை ஒருங்கிணைப்பாளரும் இணைந்துதான், தேர்தல் தொடர்பான அனைத்து பாரங்களிலும் கையெழுத்திட்டுள்ளனர்.

கட்சியின் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையிலும் அனைத்து பதவிகளையும் ஒதுக்கி, இருவரும் சேர்ந்துதான் கையெழுத்திட்டுள்ளனர்.

## சிறப்பு அமர்வு

தற்போது, ஒருங்கிணைப்பாளர் பதவியே இல்லை என்பதை தேர்தல் ஆணையம் ஏற்று அங்கீகரித்தால், பெரும் சட்ட சிக்கல் ஆகிவிடும். அந்த சிக்கலை தீர்க்க, அரசியலமைப்பு சிறப்பு அமர்வு கூடிதான், விசாரிக்க வேண்டியிருக்கும்.

அப்படியொரு கேள்வி, கோர்ட்டில் எழுப்பப்பட்டால், தற்போது அ.தி.மு.க,வின் பல்வேறு பதவிகளுக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் அனைவருடைய பதவிகளும் கேள்விக்குறியாகும் நிலை உருவாகும். இதையும், மனுவில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இரட்டை இலை சின்னம் தொடர்பாக விசாரிக்க, தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை என, முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் கூறுகிறார். அது தவறு.

தேர்தல் ஆணையம் நினைத்தால், கட்சியின் அங்கீகாரத்தை ரத்து செய்ய முடியும்; கொடுத்த சின்னத்தை வாபஸ் பெற முடியும்.

தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரமில்லை என்றால், சி.வி.சண்முகம், மிக மூத்த வழக்கறிஞர்களுடன் தேர்தல் ஆணையத்துக்குச் சென்றது ஏன்?

தேர்தல் ஆணையம், வெறும் குமாஸ்தா பணியைத்தான் செய்ய முடியும் என்று சொல்ல முடியாது. முழு அதிகாரம் உடைய அமைப்பு.

எனவே, இரட்டை இலை சின்னம் பெறுவதற்கு முன், கட்சிக்காக பாடுபட்ட அனைவரையும் ஒன்றிணைத்துச் செல்ல வேண்டும். பன்னீர்செல்வம், சசிகலா ஆகியோரிடம் பேசும் பொறுப்பு என்னுடையது.

இவ்வாறு புகழேந்தி கூறினார்.

Dinamalar

Dated: 30.04.2025

# தகுதி நீக்கம் செய்யப்பட்ட தலைவர் வேட்பாளர்களை தேர்வு செய்யலாமா?

## சுப்ரீம் கோர்ட் சந்தேகம்



**தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஒருவர், வேட்பாளர்களை தேர்வு செய்தால் ஜனநாயகத்தின் புனிதத்தன்மை எப்படி பாதுகாக்கப்படும்?**

**புதுடில்லி, ஏப். 30–** 'நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டு, தேர்தலில் போட்டியிட தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஒருவர், கட்சிப் பொறுப்பில் அமர்ந்து கொண்டு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை மட்டும் எப்படி தேர்வு செய்ய முடியும்?' என, உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது.

### பொதுநல மனு

வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாய் என்பவர், 2017ல் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

குற்றவியல் வழக்குகளில் தண்டனை பெற்ற அரசியல் கட்சி தலைவர்கள் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுகின்றனர். அந்த கால கட்டத்தில் அவர்கள் சொந்தக் கட்சியில் பொறுப்பு வகிக்கின்றனர்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட காலத்தில் ஒருவர் கட்சி பதவிகளை வகிக்கவோ, புதிய கட்சி துவங்கவோ தடை விதிக்க வேண்டும். ஒரு நபரோ அல்லது குழுவோ மிக எளிதாக ஒரு அரசியல் கட்சியை துவங்கும் அதிகாரத்தை, மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்பிரிவு 29ஏ அளிக்கிறது.

இதில் திருத்தம் செய்து, அரசியல் கட்சிகளின் பதிவு மற்றும் பதிவு நீக்கத்தை ஒழுங்குபடுத்த தேர்தல் கமிஷனுக்கு முழு அதிகாரம் வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கோரப்பட்டு இருந்தது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சிவ் கன்னா அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

### ஒத்திவைப்பு

அப்போது, 'நீதிமன்றத்தால் தண்டனை பெற்று தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஒருவர், தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை எப்படி தேர்ந்தெடுக்கலாம்? அப்படி செய்தால் ஜனநாயகத்தின் புனிதத்தன்மை எப்படி பாதுகாக்கப்படும்?' என, அமர்வு கேள்வி எழுப்பியது.

வழக்கின் இறுதி விசாரணையை ஆக., 11க்கு ஒத்திவைத்த நீதிபதிகள், இருதரப்பையும் எழுத்துப்பூர்வமான வாதங்களை சமர்ப்பிக்க உத்தரவிட்டனர்.

Dinamalar

Dated: 30-04-2025

# வாக்காளர் பட்டியலில் இறந்தோர் பெயர் நீக்கணும்



வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் பல்வேறு குளறுபடிகள் நடக்கின்றன. இது குறித்து, ஒவ்வொரு முறையும், தேர்தல் கமிஷனிடம், அ.தி.மு.க., சார்பில் புகார் தெரிவித்து வருகிறோம். வாக்காளர் பட்டியலில் இறந்தவர்கள் பெயரை நீக்க, இறப்பு சான்றிதழ்களை, அவர்களை சார்ந்தோர் அல்லது அரசியல் கட்சிகளை சேர்ந்தோர் கொடுக்க வேண்டும் என்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளே, இறப்பு சான்றிதழ் அடிப்படையில், இறந்தவர்கள் பெயரை, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். இது தொடர்பாக அ.தி.மு.க., தொடர்ந்த வழக்கை விசாரித்த, சென்னை உயர் நீதி மன்றம், 'இரட்டை பதிவு, போலி வாக்காளர்கள் போன்றோரை நீக்கி, 100 சதவீதம் முழுமையான வாக்காளர் பட்டியலை தயாரிக்க வேண்டும்' என உத்தரவிட்டது. இதை அமல்படுத்தும்படி, மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு, தேர்தல் கமிஷன் உத்தர விட வேண்டும்.

- வேலுமணி, முன்னாள் அமைச்சர்

Dinamani

Dated: 30-04-2025

# வாக்காளர் பட்டியலுடன் ஆதார் இணைப்பு: விதிகளை மாற்றியமைக்கும் திட்டமில்லை

**புது தில்லி, ஏப். 29:** வாக்காளர் பட்டியலில் குளறுபடிகளை நீக்க தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டுவரும் சூழலில், 'வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பது என்பது வாக்காளர்கள் தானாக முன்வந்து விவரங்களைப் பகிர்வதன் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும்' என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் மீண்டும் தெளிவுபடுத்தினர்.

மேலும், 'அவ்வாறு ஆதார் விவரங்களைப் பகிர்வதை கட்டாயமாக்கும் வகையில் விதிகளை மாற்றியமைக்கும் திட்டம் எதுவும் இல்லை' என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

வெவ்வேறு மாநிலங்களில் உள்ள பலருக்கு ஒரே மாதிரி வாக்காளர் அடையாள எண் வழங்கப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையாக வெடித்துள்ள நிலையில், வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கான பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரப்படுத்தியுள்ளது.

'நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின்படி, வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி மேற்கொள்ளப்படும். இதுதொடர்பாக, இந்திய தனித்துவ அடையாள ஆணைய (யுஐடிஏஐ) நிபுணர்களுடன் விரைவில் தொழில்நுட்ப ஆலோசனை தொடங்கப்பட உள்ளது' என்று தேர்தல் ஆணையம் அண்மையில் தெரிவித்தது.

இந்தச் சூழலில், வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பது என்பது வாக்காளர்கள் தானாக முன்வந்து விவரங்களைப் பகிர்வதன் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் என்பதில் எந்தவித மாற்றமும் இல்லை என தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

'வாக்காளர் அட்டையுடன் ஆதார் விவரங்களை இணைப்பதை கட்டாயமாக்கும் வகையில் விதிகளை மாற்றியமைக்கும் திட்டம் எதுவும் இல்லை' என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

'வாக்காளர் பட்டியலுடன் ஆதார் விவரங்களை இணைக்காதவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாது' என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு அண்மையில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

Dinamani

Dated: 30-04-2025

6

# வாக்காளர் பட்டியல் குளறுபடிகளை தவிர்க்க அதிமுக வலியுறுத்தல்

சென்னை, ஏப். 29: வாக்காளர் பட்டியலில் இறந்தவர்கள் பெயர்களை நீக்குவதற்கான இறப்புச் சான்றுகளை அதிகாரிகளே சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி கொறடா எஸ்.பி.வேலுமணி வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் அவர் செவ்வாய்க்கிழமை பேசியதாவது:

வாக்காளர் பட்டியலில் பல்வேறு குளறுபடிகள் ஏற்படுகின்றன. இரட்டைப் பதிவு, போலி வாக்காளர்கள், இறந்தோர் பெயர் நீக்காமலிருத்தல் என பல்வேறு சிக்கல்கள் அதில் நீடிக்கின்றன. இது தொடர்பாக நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இறந்தவர்களின் பெயர்களை நீக்க இறப்புச் சான்று அவசியம். அதனை கட்சியினரோ, இறந்தவர்களுக்கு தொடர்புடையவர்களோ சமர்ப்பித்து பட்டியலில் இருந்து உரிய நேரத்தில் பெயரை நீக்குவது என்பது நடக்காத காரியம்.

எனவே, அதிகாரிகளே அத்தகைய சான்றை பெற்று சமர்ப்பிக்க வேண்டும். 100 சதவீதம் முழுமையான, சரியான வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க தேர்தல் ஆணையத்தை வலியுறுத்த வேண்டும் என்றார் அவர்.

Dinakaran

Dated: 30-04-2025

### தவெக கட்சிக்கொடியின் யானை சின்னம் விவகாரம்

# பகுஜன் சமாஜ் கட்சி தொடர்ந்த வழக்கு தள்ளிவைப்பு

**சென்னை உரிமையியல் நீதிமன்றம் உத்தரவு**

சென்னை, ஏப். 30: த.வெ.க கொடியில் இடம் பெற்றுள்ள யானை சின்னத்தை பயன்படுத்த தடை கோரிய வழக்கு விசாரணையை ஜூன் 4ம் தேதிக்கு தள்ளி வைத்து சென்னை உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச் செயலாளர் பெரியார் அன்பன் என்கிற இளங்கோவன் சென்னை முதலாவது உதவி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், பகுஜன் சமாஜ் கட்சி அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சி. எங்கள் கட்சியின் சின்னம் யானை. இதனை தேர்தல் ஆணையம் அங்கீகாரித்து உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் சின்னத்தை யாரும் பயன்படுத்த முடியாது. ஆனால், தமிழக வெற்றி கழகம் (தவெக) யானை சின்னத்தை தனது கட்சி கொடியில் பயன்படுத்தியுள்ளது. இது தொடர்பாக ஏற்கனவே தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது தவெக கட்சி கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், தவெக கட்சி தலைவர் விஜய், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் பதிலளிக்குமாறு உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு முதலாவது உதவி உரிமையியல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணை வந்தது. நீதிபதி விடுமுறை என்பதால் பொறுப்பு நீதிபதி வழக்கை ஜூன் 4ம் தேதிக்கு தள்ளி வைத்து உத்தரவிட்டார்.